# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2014 செப்டம்பர் திங்கள் 30–ம் நாள் (30.09.2014) செவ்வாய்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**

இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் தினசரிச்சந்தை வளாகத்தில் அமைந்துள்ள கவியரசு கண்ணதாசன் மற்றும் கலைஞர் கருணாநிதி வணிக வளாக கடைகளில் காலியாக உள்ள கடைகளுக்கு 27.08.2014 அன்று ஏலம் கோரப்பட்டதில் திரு.எம்.சாகுல் அமீது, களிமார் என்பவர் மட்டும் கலைஞர் கருணாநிதி கடை எண்.16–க்கு முன்வைப்பு தொகை செலுத்தி உள்ளார். வேறு எவரும் கடைகள் ஏலம் கோர முன்வரவில்லை. ஆகவே மேற்படி முன்வைப்பு தொகை செலுத்திய திரு.எம்.சாகுல் அமீது என்பவருக்கு நகராட்சி வருவாய் இழப்பை தவிர்க்கும் பொருட்டு, அன்னாருக்கு கடை எண்.16–ஐ வாடகைக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : கலைஞர் கருணாநிதி வணிக வளாகத்தில் காலியாக உள்ள கடை எண்.16–ஐ நகராட்சி வருவாய் இழப்பை தவிர்க்கும் பொருட்டு வாடகைக்கு கடை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.அ1/2035/ /2011)

**தீர்மானம் எண்.1001 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

இந்நகராட்சியிலுள்ள புதிய சர்வர் கணனியின் வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தக் காலம் (AMC) 31.08.2014–வுடன் முடிவடைந்துள்ளது. AMC எடுத்துக் கொண்ட HCL நிறுவனத்தார் கடந்த ஒரு வருடம் நல்லமுறையில் பழுது நீக்கி தந்துள்ளார்கள். தற்போது 01.09.2014 முதல் 31.08.2015 வரையிலான காலத்திற்கு AMC புதுப்பித்துக் கொள்ள கடிதம் வரப்பெற்றுள்ளது. அவசியம் கருதி AMC ஏற்படுத்திக் கொள்ள ரூ.16,409/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.அ2/544 /2006)

**தீர்மானம் எண்.1002 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ள ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 3**

இந்நகராட்சி பொறியாளரின் Digital Signature Card பிப்ரவரி 2014–வுடன் காலாவதியாகி விட்டதால், உள்ளாட்சி தற்செயல் தேர்தல் 2014–க்கு மேற்படி Digital Signature Card –ன் தேவையினை கருத்தில் கொண்டு, அதனை புதுப்பிக்கும் பணியினை நகராட்சி சட்ட பிரிவு 15–ன்கீழ் மேற்கொண்டு, அதற்கான பட்டியல் தொகை ரூ.1,500/–ஐ வழங்கிய விவரம் மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம்.

(ந.க.எண்.இ1/280/2010)

**தீர்மானம் எண்.1003 அலுவலக குறிப்பு ஏற்று ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சிக்கு சொந்தமான கொசு மருந்து புகை இயந்திரம் (Fogging Machine) பழுதாகிவிட்டதால் பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி பிரிவு 15–ன் கீழ் பழுது நீக்கம் செய்யப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு** : பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி பிரிவு 15–ன்கீழ் பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்

(ந.க.எண்.எச்1/2160 /2012)

**தீர்மானம் எண்.1004 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பிரிவு 15–ன்கீழ் செய்யப்பட்ட பணி அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சிக்கு சொந்தமான காம்பேக்டர் லாறியில் கிளச் பழுதாகி உள்ளதால் பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி பழுதினை சரி செய்த வகையில் ரூ.1,892/– வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/1841 /2013)

**தீர்மானம் எண்.1005 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு பகுதியில் அமைந்துள்ள கதவு எண். 5–1/1 திரு.கிறிஸ்துதாஸ் என்பவர் பெயரில் உள்ளது. மேலும் குடிநீர் வரிவிதிப்பு எண்.866–ன் மீது குடிநீர் கட்டண வரி நிலுவை எதுவும் இல்லை என்று வருவாய் உதவியாளர் அறிக்கையில் தெரிவித்துள்ளார். எனவே 5–1/1–ல் உள்ள குடிநீர் இணைப்பு தற்காலிகமாக துண்டிப்பு செய்ய மனுதாரர் கோரியுள்ளார். மேற்படி மனுதாரரின் வேண்டுகோளை ஏற்று, மேற்படி கதவு எண். 5–1/1–ல் உள்ள குடிநீர் இணைப்பை தற்காலிகமாக துண்டிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/2378/2014)

**தீர்மானம் எண்.1006 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெருவில் போர் வெற்றித்தூண் அருகில் அமைந்துள்ள பூங்கா நுழைவாயிலில் Arch type LED விளக்குகள் அமைக்கவும், பூங்காவிற்கு தேவையான மின்விளக்குகள் அமைப்பதற்கும் ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.3,00,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மான எண்.992 நாள் 26.08.2014–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 25.09.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | M/s.J.Electricals, Nagercoil. | மதிப்பீட்டைவிட 1.24% அதிகம். |
| 2. | M/s.JES Electricals, Trituapuram. | மதிப்பீட்டைவிட 0.03% குறைவு. |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட M/s.JES Electricals, Trituapuram நிறுவனத்தின் 0.03% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2175/2014)

**தீர்மானம் எண்.1007 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

இந்நகராட்சி பொதுப்பிரிவு கணனிகளுக்கு Aluminum Anodized Fabrication மூலம் தனி அறை அமைப்பதற்கு ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ.40,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மான எண்.998 நாள் 26.08.2014–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 25.09.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.தேவராஜ்<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.01% குறைவு. |
| 2. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின்ஜோஸ்<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.98%அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.C.தேவராஜ், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டைவிட 0.01% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2179/2014)

**தீர்மானம் எண்.1008 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெரு போர் வெற்றித்தூண் பூங்கா முன்புறம் பேவர் பிளாக் சாலை அமைக்கவும், பூங்காவின் உட்புறம் கழிவறை வசதிகள் மேற்கொள்வதற்கும் ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.8,00,000/–க்கு இந்நகர்மன்றம் தனது தீர்மான எண்.994 நாள் 26.08.2014–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 25.09.2014 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.ஜாண் ரெக்ஸ்லின்ஜோஸ்<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.04% குறைவு. |
| 2. | திரு.C.தேவராஜ்<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.82% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.T.ஜாண் ரெக்ஸ்லின்ஜோஸ். ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டைவிட 0.04% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/2178/2014)

**தீர்மானம் எண்.1009 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 10**

இந்நகராட்சி குடிநீர் லாரி TN.74-Z-5304 –ன் தகுதி சான்றினை புதுப்பிப்பதற்காக மார்த்தாண்டம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் செலுத்தப்பட்டுள்ள தொகை ரூ.2,690/– ஐ இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/5754/2010)

**தீர்மானம் எண்.1010 அலுவலக குறிப்பு ஏற்றுகொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

**குளச்சல் நகர்மன்ற 21–வது வார்டு உறுப்பினர் திரு.எம்.நூர்முகம்மது அவர்கள் கொண்டு வரும் தீர்மானம் :**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பள்ளிக்கூடம் அமைந்துள்ள பிரதான சாலைகளில் வாகன விபத்துக்கள் நடப்பதை தவிர்க்கும் பொருட்டு, அதற்கான **"பள்ளிக்குழந்தைகள் கவனம்"** போன்ற விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய போர்டுகள் அமைப்பதற்கும், பள்ளிகளின் முன்புறம் சாலையை கடப்பதற்கு வெள்ளைக் கோடுகள் ( Zebra Crossing) இடுவதற்கும், நெடுஞ்சாலைத் துறையை கேட்டுக் கொள்வதற்கும், மேலும் பள்ளிக்கூடம் முடிந்து மாணவர்கள் வீட்டிற்கு செல்லும் நேரங்களில் பிரதான சாலைகளில் செல்லும் வாகனங்கள் மிகுந்த வேகத்தில் செல்வதால் பள்ளிக் குழந்தைகளுக்கும், பொதுமக்களுக்கும் விபத்து ஏற்படும் சூழ்நிலை உள்ளது. எனவே மேற்படி இடங்களில் விபத்து ஏற்படாமல் தவிர்க்கும் பொருட்டு, வாகனங்களின் வேகத்தை குறைத்து செல்வதற்குரிய பாதுகாப்பு அளிப்பதற்கு காவல் துறை மற்றும் போக்குவரத்து காவல்துறை ஆகியோர்களை கேட்டுக் கொள்ளவும் மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மானம் எண்.1011 ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி